**OS NO.206/2023** **Date: 18.02.2025**

**நாகராஜ் (PW2)**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணையின் பேரில் வந்துள்ளேனா அல்லது வாதிகள் கேட்டதால் வந்தேனா என்றால் வாதியின் வழக்கறிஞர் சொன்னதால் வந்தேன். நான் வாதியின் கணவர். நான் வாதியின் கணவர் என்பதை நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சாட்சியடம் வாக்குமூலத்தை காட்டி நான் வாதியின் கணவர் என்று சொல்லியுள்ளேனா என்று கேட்டதற்கு சொல்லரவில்லை என்று கூறுகிறார். வாக்குமூலத்தை வாதியின் வழக்கறிஞரார் தயார் செய்யப்பட்டு நான் கையெழுத்து செய்தேன். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட அடமான பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். சாட்சியடம் வா.சா.ஆ–2 ஆவணத்தை காட்டி தான் அந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்று கேட்டதற்கு சாட்சி தனது கையொப்பம் இல்லை என்று கூறுகிறார். வா.சா.ஆ–2 ஆவணத்தில் உள்ள சங்கதிள் எனக்கு தெரியாது என்றும் வாதி என்னுடைய மனைவி என்பதால் அவருக்கு சாதகமாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மின் பொறியாளராக குயின்ஸ்லேன்டில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் ரூ.58,000 ஆகும். வாதி அவருடைய வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு கொடுத்தாக குறிப்பிட்டுள்ள ரூ.20,00,000 என்னுடைய வருமானத்திலிருந்து தான் கொடுத்துள்ளார் என்றால் அது தவறு. வாதியிக்கு பாகப்பரிவினை மூலம் வந்த பணத்தில் தான் கொடுத்தார். வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ள பணப்பரிவர்த்தனையில் என்னுடைய பணம் ஏதும் இல்லை என்றால் சரிதான். வாதி பிரதிவாதிக்கு கொடுத்ததாக குறிப்பிடும் 20 லட்சத்தை எந்த வழியாக கொடுத்தார் என்று எனது வாக்கமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் பணமாக கொடுத்ததாக சொல்லியுள்ளேன். ஆனால் 11 லட்சம் பணமாகவும் 9 லட்சம் காசோலையாக கொடுத்தார். வாதி தானது தாவாவில் பிரதிவாதி ரூ.17,50,000 திருப்பி

கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பணத்தை எனது வங்கியில் செலுத்திக்கொண்டேனா என்றால் இல்லை. அந்த பணம் எல்லாம் வட்டியாக சிறுசிறுக கொடுத்தார். பொதுவாக வட்டி வருமானம் பெற்றால் அதற்கு வருமான வரி செலுத்தவேண்டும் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தனக்கு தெரியாது என்று கூறுகிறார். நானோ அல்லது எனது மனைவியோ வட்டி வருமானத்தை கணக்கீட்டு அதற்கு வருமான வரி தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் எந்தவித பண பரிவர்த்தனை நடக்கவில்லை என்றும் உண்மையில் வாதியின் சகோதரருக்காக பிரதிவாதியை அனுப்பினோம் என்றால் சரியல்ல. அடமான பத்தரம் பதிவு செய்ய இடைப்பட்ட காலத்தில் எனது மனைவின் வங்கி கணக்கிற்கு அவரது சகோதரர் வங்கி கணக்கிலிருந்து பெரிய தொகை பரிவர்த்தனை நடைப்பெற்றதா என்றால் இல்லை. வாதி தனக்கு தனது சகோதரரிடமிருந்து பணம் வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அந்த சங்கதி உண்மையா என்றால் இல்லை, அது தவறு. வாதியின் சகோதரரருக்கு பிரதிவாதியின் தம்பி மகளிடமிருந்து 07.06.2022 அன்று வாங்கிக்கொடுத்தார் என்றால் இல்லை. மேற்படி அந்த கிரய பத்திரத்தில் எனது மனைவி சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றும் அதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை மூலம் எனது மனைவிக்கு பணம் வந்ததால் அதற்கு என் மனைவி வருமான வரி கட்டியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்க தெரியாது. இந்த வழக்கு விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி எனது மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் நிலைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் ஏற்பட்ட பண பிரச்சனை சம்மந்தமாக ஏதாவது பஞ்சாயத்து நடந்ததா என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.